அ.சா .1.பொன்னுசாமி, த/பெ.வேலப்ப கவுண்டர்

எதிரி ஆஜரில்லை.  பிரிவு 317 குவிமுச மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.</u>

பானுமதி என்னுடைய சம்மந்தி என்றால் சரிதான்.  எனக்கு எழுதப்படிக்க தெரியும்.  என் சம்மந்தி வீட்டின் வரவு செலவு கணக்கு நான் தான் பார்ப்பேன் என்றால் இடையிடையில் நான் பார்ப்பேன் முழுவதுமாக பார்க்கமாட்டேன்.  என் சம்மந்தி வட்டிக்கு விடும் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான் விவசாயமும் செய்து வருகிறார்.  மேற்படி வட்டித்தொழில் பதிவு செய்துள்ளாரா என்றால் பதிவு செய்யும் வட்டித்தொழில் செய்யவில்லை.  எதிரி கடன் எதற்காக கேட்டார் என்றால் புதுக்கோட்டையில் **M.C. Engineering** தொழிற்சாலைக்காக பணம் கேட்டார்.  கடன் தொகை கொடுக்கும்போது நாங்கள் ஒப்பந்தம் செய்து தான் கடன் கொடுப்போம். கடன் தொகையை திரும்ப செலுத்தும்போது அந்த ஒப்பந்தத்தை நாங்களே வாங்கி ரத்து செய்துவிடுவோம் என்றால் சரிதான்.  மேற்படி ஒப்பந்தம் அனைத்தும் பதிவு செய்து வருகிறோம் என்றால் ஒப்பந்தத்தை பதிவு செய்யமாட்டோம்.

2. எதிரி கடன் தொகையை எந்த தேதியில் கேட்டார் என்றால் 2017 ம் வருடம் கேட்டார்.  எதிரி கடன் கேட்ட தேதியிலேயே நாங்கள் எதிரிக்கு **ICICI BANK** ன் **RTGS** மூலம் சு.15,70,000/- வழங்கினோம்.  எதிரிக்கு பணம் கொடுக்கல் வாங்கல் சமயத்தில் ஒப்பந்தத்தை தவிர புரோநோட்டை பெற்றுக்கொண்டோம்.  புரோநோட்டை பொறுத்தவரை நாங்கள் தான் எழுதிக்கொடுப்போம் அதில் எதிரி கையெழுத்து செய்தார்.  வழக்க புரோநோட்டை எங்கே வைத்து எழுதினார் என்று எனக்கு தெரியாது. புரோநோட் சாட்சிகள் யார் என்று எனக்கு புரோநோட் சாட்சி பெயர் ஞாபகமில்லை.  புரோநோட்டில் எத்தனை நபர்கள் கையெழுத்து செய்தார்கள் என்றால் இரண்டு நபர்கள் மட்டும் கையெழுத்து செய்துள்ளார்கள்.  எதிரி காசோலையை 2017 ம் வருடமா என்றால் இல்லை 2019 ம் வருடம்

கொடுத்தார். வழக்கு காசோலையை யார் வங்கியில் வசூலுக்கு செலுத்தினார் என்றால் பானுமதி தான் வங்கியில் வசூலுக்கு செலுத்தினார். வழக்கு காசோலையை யார் பூர்த்திசெய்தார்கள் என்றால் எதிரியின் கம்பெனிக்காரர்கள் பூர்த்தி செய்தார்கள். என்னிடம் காட்டப்படும காசோலை தான் வழக்கு காசோலை ஆகும். என்னிடம் காட்டப்படும் காசோலையில் உள்ள கையெழுத்து பால்பாயிண்ட் பேனாவிலும், மற்ற விவரங்கள் மையினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம் எதிரி தான் பூர்த்தி செய்தார்.

3. எதிரிக்கு கொடுத்த கடனுக்கு வட்டி வீதம் என்னவென்றால் ரூ.100/-க்கு 5 பைசா வட்டி என கணக்கிடப்பட்டுள்ளது. வட்டி விகிதம் ரூபாயில் கணக்கிடப்படுமா அல்லது பைசாவில் கணக்கிடப்படுமா என்றால் பைசாவில் கணக்கிடப்படும்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.**

**ஒம்/.எம்.சார்லஸ் ஆல்பர்ட்,**
**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**